Deposition of Witness for : PW-1 | Date : 07/11/2023

Case No. : O.S. 338/2019 | Nationality : Indian

Name :ஹபிப் முகமது | Religion :

Father's/Husband's Name : உமர் கதாப் | Age :70

Village :

Taluk :

வா.சா.1

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞருக்கு நான் தான் விவரங்கள் கூறினேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்து விவரம் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. எனது வழக்கறிஞர் எதிர்வழக்குரையில் உள்ள விவரங்களை என்னிடம் கூறினாரா என்றால் இல்லை. தாவா சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்றால் குத்தாலம் தாலுக்கா, வேளூர் கிராமத்தில் உள்ளது. தாவா சொத்துக்களின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண்.157 மற்றும் 154 ஆகும். மேற்படி இரண்டு சொத்துக்கள் யாரால் கிரையம் வாங்கப்பட்டது என்றால் எனது தந்தை 1956 ம் ஆண்டு கிரையம் வாங்கினார். யாரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்றால் அபுபக்கர் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கினார்.

2. எனது தகப்பனார் இறந்த பிறகு மேற்படி சொத்துக்களை எனது தாயார் தான் பார்த்து வருகிறார் என்றால் குடும்பத்தின் பொது சொத்து என்பதால் எனது தாயார் பார்த்து வருகிறார். தாவா சொத்து குடும்பத்தின் பொது சொத்து என்பதை எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். தாவா சொத்துக்களின் விஸ்தீரணம் என்னவென்றால் சர்வே எண்.157 ல் 49 சென்ட், சர்வே எண்.154 ல் 1 ஏக்கர் 17 சென்ட் விஸ்தீரணம் ஆகும். எனது தகப்பனார் அபுபக்கரிடமிருந்து கிரையம் வாங்கியதாக

சொல்லப்படும் கிரைய பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அந்த பத்திரத்தை யாரும் பார்த்ததில்லை. அந்த பத்திரத்தை பார்க்காமல் எவ்வாறு எனது தகப்பனார் கிரையம் பெற்றதாக நான் சொல்கிறேன் என்றால் எனது தாயார் சொல்லி தெரியும்.

3. அபுபக்கரிடமிருந்து எனது தகப்பனார் கிரையம் பெற்ற சொத்தினை நாகன் என்பவர் குத்தகை சாகுபடி செய்து வந்தார் என்றால் சரிதான். நாகன் குத்தகை சாகுபடி செய்து வந்தார் என்ற விவரத்தை எனக்கு யார் கூறினார் என்றால் எனக்கே தெரியும். மேற்படி விவரத்தை எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நாகன் எந்தெந்த சொத்தினை குத்தகை சாகுபடி செய்து வந்தார் என்றால் மொத்தம் 3 சொத்துக்களை குத்தகை சாகுபடி செய்து வந்தார். அதில் 2 சொத்துக்களை பொறுத்து இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். 3வது சொத்து குத்தாலம் தாலுக்காவில் உள்ளதால் வழக்கு தாக்கல் செய்யவில்லை. நாகன் எனது தாயாரிடம் குத்தகையை சரண்டர் செய்து சரண்டர் பத்திரம் எழுதி கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். 1977ம் ஆண்டு எழுதி கொடுத்துள்ளார். 1977ம் ஆண்டு நான் வெளிநாட்டில் இருந்தேன் என்றால் சரியல்ல. இங்கு தான் இருந்தேன்.

4. தாவா சொத்துக்கள் எனது தாயார் மூலமாக ஓ.என்.ஜி.சி நிறுவனத்திற்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது தாயார் கொடுக்கவில்லை. யார் மூலமாக வாடகைக்கு கொடுக்கப்பட்டது என்றால் 1ம் பிரதிவாதி மூலமாக கொடுக்கப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி தான் வாடகைக்கு கொடுத்தார் என்ற விவரம் எவ்வாறு எனக்கு தெரியும் என்றால் நான் 2015ம் ஆண்டு ஓ.என்.ஜி.சி நிறுவனத்தில் விசாரிக்கும்போது தெரிய வந்தது. மேற்படி விவரங்களை எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் எந்த வருடம் முதல் எந்த வருடம்

வரை வெளிநாட்டில் இருந்தேன் என்றால் 1977 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் 2014 ம் ஆண்டு வரை இருந்தேன்.

5. தாவா நிலமானது ஓ.என்.ஜி.சி நிறுவனத்திடம் 1999 ம் ஆண்டு முதல் தற்போது வரை குத்தகைக்கு இருக்கிறது என்றால் சரிதான். எந்த தேதியில் நான் வேலி வைக்கும்போது பிரதிவாதிகள் பிரச்சனை செய்தார்கள் என்றால் 2015 ம் ஆண்டு பிரச்சனை செய்தார்கள். அவ்வாறு பிரச்சனை செய்தது குறித்து காவல் நிலையத்தில் புகார் ஏதும் அளித்தேனா என்றால் புகார் கொடுத்துள்ளேன். அவ்வாறு காவல் நிலையத்தில் புகார் ஏதும் கொடுக்கப்படவில்லை என்றாலும், அவ்வாறு கொடுத்திருந்தால் அதனை இவ்வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. 21/02/1976 ம் தேதி எங்கள் குடும்பத்தில் குடும்ப கரவோலை ஏற்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1976 ம் வருடம் எங்கள் குடும்பத்தில் குடும்ப கரவோலை ஏற்பட்டு அந்த கரவோலைப்படி எனது தகப்பனார் இறந்த பிறகு தாவா சொத்துக்கள் எனது தாயாருக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. மேற்படி கரவோலைப்படி எனது தாயார் தான் தாவா சொத்துக்களை நிர்வாகம் செய்து வந்தார் என்றால் சரியல்ல.

6. நாகனிடம் இருந்து குத்தகை சரண்டர் பெற்ற பிறகு தான் நிர்வாகம் செய்து வந்தார். 1977 ல் குடும்ப கரவோலைப்படி தான் எனது தாயார் நாகனிடம் விடுதலை பத்திரம் வாங்கினார் என்றால் சரியல்ல. எனது குடும்பத்தில் என்னையும், 1 ம் பிரதிவாதியையும் தவிர வேறு வாரிசுகள் உள்ளார்களா என்றால் உள்ளார்கள். மூத்த சகோதரி சம்சுநிஷா, சகோதரிகள் உமல் பஸ்ரியா, மும்தாஜ் பேகம், ஆசியா மரியம் ஆகியோர் மற்ற வாரிசுகள் ஆவர். மற்ற வாரிசுகளை இவ்வழக்கில் ஏன் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் நான் மூத்தவன் என்பதாலும், எனக்கு கிடைத்தால் நான் அவர்களுக்கு கொடுப்பேன் என்பதாலும், அவர்களை தரப்பினராக சேர்க்கவில்லை. நான் 1977 ம் ஆண்டில் இருந்தே

வெளிநாட்டில் இருந்து வந்ததால் தாவா சொத்து சம்மந்தமாக எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றால் சரியல்ல. நான் வெளிநாட்டில் இருந்து வரும்போதெல்லாம் எனது தாயார் தாவா சொத்து பற்றி என்னிடம் சொல்வார்.

7. 1976 ம் ஆண்டு கரவோலை பத்திரத்தின் படி தாவா சொத்து எனது தாயாருக்கு கிடைக்கப்பெற்று அதன் அடிப்படையில் எனது தாயார் தாவா சொத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதிக்கு ஹிபா எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அவ்வாறு ஹிபா எழுதி கொடுத்ததாக எனது தாயார் என்னிடம் சொல்லவில்லை. சொத்துக்களை நான் தான் பிரித்து கொடுக்க வேண்டும் என்று எனது தாயார் என்னிடம் சொல்லி வந்தார். அவ்வாறு எனது தாயார் சொல்லி வந்ததாக வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் அனைத்து விவரங்களையும் எனது வழக்கறிஞரிடம் சொல்லியுள்ளேன்.

8. வழக்குரை பாரா-3 ல் வாதி 1ம் பிரதிவாதி ஆகியோர் நெடுங்காலமாக வெளிநாட்டில் வேலை பார்த்து வந்ததால் தாவா சொத்துக்கள் பாத்திமா பீவி அவர்களாலேயே நல்ல முறையில் ஆண்டு அனுபவிக்க பட்டும், பராமரிக்கப்பட்டும் வந்தன என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தாயார் 1ம் பிரதிவாதிக்கு 2005 ம் ஆண்டு எழுதி கொடுத்துள்ள ஹி பா ஆவணத்தின் அடிப்படையில் 2 ம் பிரதிவாதிக்கு ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் வெளிநாட்டில் இருந்ததால் மற்ற வாரிசுகளுக்கு ஹி பா பற்றி தெரியும் என்பதால் தான் அவர்களை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் வாய்மொழியாக கேட்டபோது அவர்கள் ஹி பா பற்றி தெரியாது என்று சொல்லிவிட்டார்கள். எனது சகோதரிகளை இவ்வழக்கில் தரப்பினராக சேர்ப்பதற்கு எனக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான். எனது தாயார் 1ம் பிரதிவாதிக்கு 2005 ம் ஆண்டு எழுதி கொடுத்துள்ள ஹிபா ஆவணத்தின் அடிப்படையில் 2 ம் பிரதிவாதிக்கு எழுதி

கொடுத்துள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்தினை 2ம் பிரதிவாதி ஆண்டு அனுபவித்து வருகின்ற விவரம் எனக்கு தெரியும் என்றாலும், அதனை மறைத்து பொய்யாக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கிற்கு வழக்கு மூலம் எதுவும் இல்லை என்றாலும், நான் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறு என்றாலும், நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

**Sd/N.Sivapalani/**
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.